


கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், சென்னை வடக்கு திட்ட மின் கழக தொ.மு.ச. தேர்தலில் மூன்றாவது முறையாக சென்னை வடக்கு திட்டச் செயலாளராக வெற்றி பெற்ற மாநிலத் தலைவர் கே.சசிகுமார் தலைமையில் புதிய நிர்வாகிகள் – திட்டத் தலைவர் எம்.நாகராஜ், திட்ட பொருளாளர் டி.அருள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர், மு.க.ஸ்டாலின் ஆகியோரின் கழக ஆட்சிகாலங்களில் மின் தொ.மு.ச. வாரிய தொழிலாளர்களுக்கு வழங்கிய சலுகைகள் மற்றும் சாதனைகள் அடங்கிய புத்தகத்தை கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கி, அதனை மகிழ்ச்சியுடன் பெற்று வெளியீடு செய்தார்கள்.

### கர்நாடக தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

## துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ நூல் அறிமுக விழா!

### பெங்களூருவில் நவ.9ல் நடைபெறுகிறது!

பெங்களூரு, நவ.7-

கர்நாடக மாநில திமுக இலக்கிய அணி சார்பில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ என்ற நூல் அறிமுக விழா பெங்களூருவில் நவம்பர் 9ம் தேதி காலை 10 மணிக்கு குயின்ஸ் ரோட்டில் உள்ள இந்திய வேளாண்மை கழகம் அரங்கத்தில் நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி தலைவர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார்.

கர்நாடக மாநில தி.மு.க. நிர்வாகிகள் இலக்கிய அணி இளைஞரணி, மகளிர் அணி, தொ.மு.ச. நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர் டாக்டர் ஜெயராஜமூர்த்தி நூல் அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்குகிறார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளர் நாகை சந்திரபாபு பாரதி. ஆர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழா மேடையில் சிறப்பு நூலை பெறுபவர்கள் மதுசூதன் பாபு (லிட்டில் பிளவர் பள்ளி, செங்கம்) வ.முருகன் தொழிலதிபர் (வி ஸ்கொயர் வணிக வளாகம்,) ஹரி கிருஷ்ணன் கேஎஸ் ஆர்டிசி, கார்த்திக், இலக்கியா (தாளாளர் சிகரம் மெட்ரிகுலேஷன் செங்கம்,) கிரி, திருப்பத்தூர் எஸ்.ராஜேந்திரன் எஸ். பிரான்சிஸ் ஷமீன் சுலைமான் ஆகியோர் நூல்களை பெற்றுக் கொள்கின்றனர்.

தங்க தங்கவயல் கரிகாலன் நன்றி கூறுகிறார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவனத் தலைவர் தனியரசு அவர்கள் சந்தித்து பேசினார்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பு – அரசு விதிகளுக்குட்பட்டே

## உதவி பதிவுத்துறை தலைவர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது!

### பத்திரப்பதிவுத்துறை அறிவிப்பு!

சென்னை, நவ.7-

பதிவுத்துறையில் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலான இட ஒதுக்கீடு அடிப்படையில் உதவி பதிவுத்துறை தலைவர் பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் வழங்கப்படவில்லை என்பது தொடர்பான செய்தி குறிப்பின் மறுப்பு செய்தி வருமாறு:-

பதிவுத்துறையில் காலியாக உள்ள உதவி பதிவுத்துறை தலைவர் பணியிடங்களை நிரப்பவும், பதிவுப் பணி தொய்வில்லாமல் நடைபெறவும், மக்களுக்கு பதிவு சார்ந்த சேவைகளை வழங்குவதை துரிதப்படுத்தவும் பதிவுத்துறையின் நிர்வாக நலன்களை கருத்தில் கொண்டு, நடைமுறையில் உள்ள சட்டவிதிகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில், 31.10.2025 அன்று 30 தகுதி வாய்ந்த மாவட்டப்பதிவாளர்களை உள்ளடக்கி 2022-2023-ம் ஆண்டிற்கான உதவி பதிவுத்துறை தலைவர் தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டு பணி நியமனம் வழங்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் Civil Appeal Nos(s) 9334& 9335 of 2018-ன் 11.09.2018 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் இடஒதுக்கீடு விதியை பின்பற்றி 1997--98 ஆண்டு முதலான இரண்டாம் நிலை சார்பதிவாளர் மற்றும் அதற்கு பின்னர் வெளியிடப்பட்ட உயர் பதவிகளுக்கான பட்டியல்களை திருத்தம் செய்திட ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே 2009-20-10 முதல் 2019-2020 வரையிலான ஆண்டுகளுக்கான மாவட்டப்பதிவாளர் தேர்ந்தோர் பெயர் பட்டியல் இட ஒதுக்கீடு மற்றும் மதிப்பெண் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைந்த பட்டியலாக 02.02.2024 நாளிட்ட அரசாணையின் படி வெளியிடப்பட்டது.

அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட மாவட்டப்பதிவாளர் தேர்ந்தோர் பெயர் பட்டியல்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டவாறு இட ஒதுக்கீடு சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தற்போது வெளியிடப்பட்ட உதவி பதிவுத்துறை தலைவர் தேர்ந்தோர் பட்டியலுக்கு மேற்கூறப்பட்ட இட ஒதுக்கீடு அடிப்படையிலான 131 நபர்கள் அடங்கிய மாவட்டப்பதிவாளர் முதுநிலை பட்டியல் கருத்தில் கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 131 நபர்களில், ஒரு சிலர், மாவட்டப்பதிவாளர் நிலையில் 2 ஆண்டுகள் பணி முடித்து தகுதிகாண் பருவம் நிறைவு செய்யாத நிலையில், உதவிப்பதிவுத்துறை தலைவர் தற்காலிக தேர்ந்தோர் பட்டியலில் சேர்த்திட இவர்கள் பரிசீலிக்கப்படவில்லை.

எனவே மேற்படி முதுநிலை பட்டியலில் இடம்பெற்றுள்ள 131 நபர்களில் மாவட்ட பதிவாளர் பதவியில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லாத தகுதி வாய்ந்த 30 நபர்களை உள்ளீடு செய்து உதவி பதிவுதுறைத் தலைவர் தற்காலிக தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டது. எனவே, மேற்படி பதவி உயர்வு பட்டியல் உச்சநீதிமன்ற தீர்ப்பு மற்றும் அரசு விதிகளுக்கு உட்பட்டே வெளியிடப்பட்டுள்ளது.

### திருச்சி தெற்கு மாவட்டம் – கிழக்கு தொகுதியில்

## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, நவ.7-

திருச்சி தெற்கு மாவட்டம் திருச்சி கிழக்கு தொகுதியில் கலைஞர் நகர் பகுதி, 63 வது வார்டு பாகம் எண் 233, பெருமாள்கோவில் தெரு, பாலக்கரை பகுதி 50 A, பாகம் எண் 150 காவிரி தியேட்டர் அருகில், அரிய மங்கலம் பகுதி 31அ வார்டு பாகம் எண் 121 கல்பாளையம் மைதானம், மார்க்கெட் பகுதி வார்டு 20A, பாகம் எண் 109 மணி மண்டபம் சாலை, மலைக்கோட்டை பகுதி, வார்டு -12A, பாகம் எண் -12, மேலச்சிந்தாமணி காவேரி நகர், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் “என் வாக்குச்வாவடி வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தொகுதி பார்வையாளர் கதிரவன், பகுதி கழகச் செயலாளர்கள் மணிவேல், ராஜ் முஹம்மது, மோகன், பாபு, விஜயகுமார் வார்டு செயலாளர்கள் கலியமூர்த்தி, ஞானசேகர், சாகுல், செந்தில் குமார், சுருளிராஜன், ஜெயச்சந்திரன், மற்றும் , உட்பட்ட கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ, பி.எல்.சி, பி டி ஏ, ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பெய்யாமொழி உரையாற்றியபோது, அரசினுடைய சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நம் ஆட்சியின் பயன்களை பெற்ற பயனாளிகளை அடையாளம் காண வேண்டும். சரியான புதிய வாக்காளர்களை சேர்க்கவும், தவறுதலான போலியான வாக்காளர்களை நீக்கவும் துரிதமாக பணியாற்ற வேண்டும்.

இல்லங்கள் தோறும் அரசின் சாதனைகள் குறித்த துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். SIR போன்ற ஜனநாயக விரோதப் போக்கை எதிர்கொள்ள கழகத்தின் BLA2, BLC மற்றும் BDA ஆகியோர் ஆற்ற வேண்டிய பணிகளை எடுத்துரைத்தார். அனைவரும் ஓரணியாய் உழைத்து, உதயசூரியன் வெற்றியை உறுதி செய்வோம் என்று உறுதி எடுத்துக் கொண்டனர்.

### திருவள்ளூர் ஒன்றியம் புட்லூர் ஊராட்சியில்

## ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், நவ. 07

திருவள்ளூர் ஒன்றியம், புட்லூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை பூந்தமல்லி தொகுதி எம் எல்ஏ அ.கிருஷ்ணசாமி தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார். தனித்துணை ஆட்சியர் (சபாதி) ஆர்.பாலமுருகன், வட்டாட்சியர் எஸ்.பாலாஜி, தனி வட்டாட்சியர் விஜய குமாரி வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) பி.செல்வகுமார், (கி.ஊ.) ஜானகி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலாவதி, ஸ்ரீராம் காந்தி, துணை வட்டாட்சியர் தினேஷ், வருவாய் ஆய்வாளர் உதயகுமார், கிராம நிர்வாக அலுவலர் ஜான்சன், ஊராட்சி செயலர் கோபிநாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி பொது மக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு பயனாளிகளுக்கு உடனடியாக சான்றிதழ்களையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தையும் வழங்கினார்.

இதனை தொடர்ந்து 300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் திருவள்ளூர் மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் 15 வது நிதி குழு மானியம் நிதிலிருந்து 19 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

இதில் ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், முன்னாள் ஊராட்சி தலைவர், மாவட்ட பிரதிநிதி டி.எம். ராமச்சந்திரன், நிர்வாகிகள் டி.கே.சீனிவாசன், ஆர். தினேஷ்குமார், எஸ்.சௌந்தரராஜன், ஜெயக்குமார், அருண்கீதன், வேணு, கார்த்திகேயன், கலைமணி, மல்லிகா சந்திரன், மகிமைதாஸ், பாரதிதாசன், எத்திராஜ், மகாதேவி, நதியா, விஜயகுமார், செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர் சுமார் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.

### அடையாறு மண்டலம் வார்டு 169–க்குட்பட்ட பகுதிகளில்

## ரூ.7.47 இலட்சம் மதிப்பீட்டில் சலவைக் கூடம் - வாசிப்பு மண்டலம்!

### அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு 169க்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.47 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சலவைக் கூடம் மற்றும் வாசிப்பு மண்டலத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று (06.11.2025) திறந்து வைத்தார்.

அடையாறு மண்டலம், வார்டு169, ஜோதியம்மாள் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 4.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சலவைக் கூடத்தின் கட்டடத்தினை திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் அருகிலேயே செயல்பட்டு வரும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டடத்தில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த மாணவர்களிடம் கலந்துரையாடி நூலகத்தின் வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள ஹாமில்டா பூங்காவில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 2.82 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட வாசிப்பு மண்டலத்தினை திறந்து வைத்து, வாசிப்பு மண்டலத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்கள் மற்றும் வசதிகளை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (06.11.2025) நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கைவளங்கள்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கு தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று உதகமண்டலத்தைச் சேர்ந்த தோடர் பழங்குடி இன சமூகத்தின் முதல் பெண் மருத்துவ மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செல்வி ஆர்.நேத்துசின் தமது பெற்றோர் நர்ஸ்த்தோர் திருமதி.நித்யா ஆகியோருடன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் எஸ்.சி., எஸ்.டி ஆணையத்தின் உறுப்பினர் எம்.பந்தோஷ் உள்ளார்.